# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

## III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

## SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

NOVEMBER 13, 1923.

ந. 18 (4).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ நவம்பர் ௴ 13௳. [விலை, 6 பை


# இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டுகள்

# ACTS OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

---

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1923-ம் ௵ ஆகஸ்ட் ௴ 3௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

## ACT No. XXXVII OF 1923.

## 1923-ம் ௵த்தைய 37-வது ஆக்ட்.

---

### AN ACT FURTHER TO AMEND THE CODE OF CRIMINAL PROCEDURE, 1898, FOR CERTAIN PURPOSES.

### 1898-ம் ௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தை சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

---

1898-ம் ௵த்து 5-வது ஆக்ட்.

1898-ம் ௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தை இதில் பின்னால் கண்ட சில காரியங்களுக்காகப் பின்னும திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடைக் குறித்த 1923-ம் ௵த்து (இரண்டாவது திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் நியமிக்கக்கூடிய தேதியன்றைக்குச் செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

1898-ம் ௵த்து 5-வது ஆக்ட்.

1898-ம் ௵த்து 5-வது ஆக்ட் 364-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை கோட் என்று குறிப்பிடப்படும்) 1898-ம் ௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 364-வது பிரிவிலே,—

(a) (3) குறிப்பிட்ட உட்பிரிவில், "ராஜதானி மாஜிஸ்ட்ரேட்டா பிராதபட்சத்தில்" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும் ; மேலும்,

(b) (4) குறிப்பிட்ட உட்பிரிவில், "அல்லது 362-வது பிரிவைச் சேர்ந்த (2 A) குறிப்பிட்ட உட்பிரிவின்படி" என்று பொருள்படும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "அல்லது யாதொரு ராஜதானி மாஜிஸ்ட்ரேட் நடத்துகிற பரிசீலனையில்" என்று பொருள்படும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 388-வது பிரிவுக்கு பர்த்தியாக புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

3. ஷை கோட் 388-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற் கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

காவல் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைப்பது.

"388. (1) யாதொரு குற்றவாளி அபராதம் செலுத்தும்படி மாத்திரம் சிட்சை விதிக்கப்பட்டும் அந்த அபராதத்தைச் செலுத்தாவிட்டால் அவன் காவலில் வைக்கப்படுவானென்று சிட்சை விதிக்கப்பட்டுமிருந்து, அபராதம் உடனே செலுத்தபடாதபட்சத்தில், கோர்ட்டார்—

(a) உத்தரவு பிறப்பித்து, ஷை அபராதமானது அந்த உத்தரவின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு மேற்படாத ஒரு தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்னதாகவாகிலும் மொத்தமாகச் செலுத்தப்படவேண்டுமென்றாவது அடியிற்கண்டபடி இரண்டு அல்லது மூன்று தவணைகளாகச் செலுத்தப்படவேண்டுமென்றாவது அதில் காணலாம்; ஷை தவணைகளில் முதல் தவணைத் தொகையானது உத்தரவின் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்கு மேற்படாத ஒரு தேதியன்றைக்கும் அல்லது அதற்கு முன்பும் மற்ற தவணைத் தொகை அல்லது தொகைகள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி முப்பது தினங்களுக்கு மேற்படாமல் இடைக்காலம் அல்லது இடைக்காலங்கள் விட்டும் செலுத்தப்படத்தக்கவையாகும்; மேலும்,

(b) காவல் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைத்து, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அபராதத்தையாவது அதன் தவணைத் தொகைகளையாவது எந்தத் தேதி அல்லது தேதிகளிலாகிலும் அவைகளுக்கு முன்பாகிலும் செலுத்தவேண்டுமோ அந்தத் தேதி அல்லது தேதிகளில் கோர்ட்டாருக்கு முன்பாகக் குற்றவாளி ஹாஜராவதற்காக ஷரத்து கண்டு, தங்களுக்கு யுக்தமாய்த் தோற்றுகிறபடி ஜாமீன்தாரர்கள் சகிதமாகவாயினும் ஜாமீன்தாரர்கள் இல்லாமலாயினும் அவன் முச்சலிக்கா எழுதிக் கொடுப்பதன்மேல் அவனை விட்டுவிடலாம்; மேலும், அவர்கள் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி அபராதத் தொகையாவது யாதொரு தவணைத் தொகையாவது பிரஸ்தாப உத்தரவின்படி செலுத்தப்படத்தக்கதாகிற கடைசி தேதியன்றைக்காகிலும் அதற்கு முன்பாகிலும் வசூலாகாதிருக்கிறபட்சத்திலே, காவல் தண்டனையை உடனே நிறைவேற்றிவைக்கும்படி கட்டளையிடலாம்.

(2) தொகை செலுத்தும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்து அது வசூலாகாத பட்சத்தில் காவல் தண்டனை விதிக்கப்படக்கூடிய யாதொரு விஷயத்தில் அந்தத் தொகை உடனே செலுத்தப்படாமலிருக்குமானால், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்திலுங்கூட (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படத்தக்கவையாகும்; மேலும், ஷை உத்தரவு யார் விஷயமாய்ச் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபர் அந்த உட்பிரிவில் குறிப்பிட்டபடிக்குள்ள முச்சலிக்கா எழுதிக்கொடுக்கும்படி உத்தரவு செய்யப்படுவதன்மேல், அந்தப்படி செய்யத் தவறிப்போனால், கோர்ட்டார் உடனே காவல் தண்டனை விதித்துவிடலாம்."

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 562-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை கோட் 562-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட உட்பிரிவை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

குற்றவாளியென்று தீர்மானம் செய்வதும் எச்சரிக்கை செய்து விடுதலை செய்வதும்.

"(1-A) யாதொரு நபர் திருடுவது, கட்டிடத்தில் திருடுவது, அயோக்கியத்தனமான துர்விநியோகம், மோசம் அல்லது இந்தியன் பினல்கோடின்படி இரண்டு வருஷத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனை விதிக்கத்தக்க வேறே யாதொரு குற்றம் செய்தானென்று தீர்மானிக்கப்படும் யாதொரு விஷயத்திலே, அவன்மேல் முந்திய குற்ற ஸ்தாபனை எதுவும் ருஜுவாகாவிட்டால், அவன் எந்தக் கோர்ட்டாருக்குமுன் அந்தப்படி குற்றவாளியென்று தீர்மானிக்கப்படுகிறானோ அந்தக் கோர்ட்டார் - குற்றவாளியின் வயதையும் யோக்கியதையையும் முந்திய நடத்தையையும் தேகத்தின் அல்லது மனத்தின் ஸ்திதியையும், குற்றத்தின் அற்பத்தன்மையையும் அல்லது குற்றம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் மன்னிக்கத்தக்க இயல்பையும் உத்தேசித்து அவனுக்கு யாதொரு தண்டனை விதிப்பதற்கு பர்த்தியாக தக்கபடி எச்சரிக்கை செய்து அவனை விடுதலை செய்யலாம்." 1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 5-வது ஷெட்யூலில் திருத்தம்.

5. ஷை கோடின் 5-வது ஷெட்யூலில், 37-A குறிப்பிட்ட நமூனாவிலே,—

(a) " -ம் வருஷம் மாதம் தேதி வரையில்" என்று பொருள்படும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்; மேலும்,

(b) "அந்தத் தேதியன்றைக்கு" என்று பொருள்படும் வார்த்தைகளுக்கும், "அடுத்த மாதத்தின் ஷை தேதியன்றைக்கு" என்று பொருள்படும் வார்த்தைகளுக்கும், "அடுத்த மாதத்தின் தேதியன்றைக்கு" என்று பொருள்படும் வார்த்தைகளுக்கும் பர்த்தியாக, "அடியிற்கண்ட தேதியில் (அல்லது தேதிகளில்), அதாவது :— " என்று பொருள்படும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1923-ம் வருஷத்து 18-வது ஆக்ட். ரத்து.

6. க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடைக்குறித்த 1923-ம் வருஷத்து (திருத்துவதற்கான) ஆக்ட் 98-வது, 104-வது பிரிவுகள் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

---

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது-1923-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 5வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

## ACT No. XXXVIII OF 1923.

## 1923-ம் வருஷத்து 38-வது ஆக்ட்.

---

## AN ACT FURTHER TO AMEND THE LAND ACQUISITION ACT, 1894, FOR CERTAIN PURPOSES.

## 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக் கொள்வதற்கான ஆக்டை சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

---

1894-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.

1894-ம் வருஷத்து நிலமெடுத்துக்கொள்வதற்கான ஆக்டை இதில் பின்னால் கண்ட சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, நிலமெடுத்துக்கொள்வதைக்குறித்த (திருத்துவதற்கான) 1923-ம் வருஷத்து ஆக்டென்று சொல்லலாம்.

(2) இது - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் நியமிக்கக்கூடிய தேதியன்றைக்குச் செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

1894-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.

1894-ம் வருஷத்து 1-வது ஆக்ட் 4-வது பிரிவில் திருத்தம்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக் கொள்வதற்கான ஆக்ட் 4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், "வேண்டும் போலிருக்கிறதென்று" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "வேண்டியிருக்கிறதென்றாவது வெகுசாய் வேண்டியிருக்குமென்றாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1894-ம் வருஷத்து 1-வது ஆக்டில் புதிய 5A பிரிவை அமைத்துக்கொள்வது.

3. ஷை ஆக்ட் 5-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட தலைப்பையும் பிரிவையும் அமைத்துக்கொள்ளவேண்டும் ; அவை யாவன :—

"ஆட்சேபணைகள்.

ஆட்சேபணைகளைப் பற்றி விசாரணை செய்வது.

5A. (1) யாதொரு நிலம் அசேஷ ஜனங்களுடைய உபயோகத்துக்காகவாவது யாதொரு கம்பெனிக்காகவாவது வேண்டியிருக்கிறதென்றாகிலும் வெகுசாய் வேண்டியிருக்குமென்றாகிலும் 4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அறிக்கை செய்யப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட நிலத்தில் அக்கறையுள்ள யாதொரு நபர் - ஷை விளம்பரம் பிறப்பிக்கப்பட்ட பிறகு முப்பது தினங்களுக்குள், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த நிலத்தையாயினும் அந்தப் பிரதேசத்திலுள்ள யாதொரு நிலத்தையாயினும் எடுத்துக்கொள்ளக்கூடாதென்று ஆட்சேபணை செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்துகொள்ளும் ஒவ்வொரு ஆட்சேபணையையும் எழுத்துமூலமாய்க் கலெக்டரிடத்தில் செய்துகொள்ளவேண்டும் ; கலெக்டரானவர் - ஆட்சேபணை செய்பவர் சொல்லிக்கொள்ள வேண்டியதை நேரில் சொல்லிக்கொள்ளவாவது ப்ளீடர் மூலமாய்ச் சொல்லிக்கொள்ளவாவது அவருக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் ; மேலும், ஷை கலெக்டர் - அப்படிப்பட்ட சகல ஆட்சேபணைகளைக் கேட்டபிறகும் தமக்கு அவசியமாய்த் தோற்றும் பின்னும் ஏதாவது விசாரணை செய்த பிறகும், பிரஸ்தாப கேஸைத் தாம் நடத்திய நடவடிக்கைகளைக் குறித்த ரெக்கார்ட் (தஸ்தவேஜு) சகிதமாகவும் அந்த ஆட்சேபணைகளைப்பற்றித் தாம் செய்யும் சிபாரிசுகள் அடங்

கிய ஒரு ரிபோர்ட் சகிதமாகவும் பிரதேச கவர்ன்மென்டாரின் தீர்மானத்துக்கு அனுப்ப வேண்டும். ஷை ஆட்சேபணைகள் விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

(3) இந்த ஆக்டின்படி நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டால் கொடுக்கப்படும் பிரதிபலனில் பாத்தியதை கொண்டாட அர்ஹராயிருக்கும் யாதொரு நபர் - இந்தப் பிரிவின் காரியங்களுக்காக அந்த நிலத்தில் அக்கறையுள்ளவராகக் கருதப்படுவார்."

1894-ம்வருஷத்து 1-வது ஆக்ட் 6-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 6-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், "பிரதேச கவர்ன்மென்டாருக்குத் தோற்றும்போதெல்லாம்" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—"5 A பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட ரிபோர்ட் ஏதாகிலும் இருந்தால் அதைப்பற்றி ஆலோசனை செய்த பிறகு பிரதேச கவர்ன்மென்டார் திருப்தியடைந்தால்".

1894-ம்வருஷத்து 1-வது ஆக்ட் 11-வது பிரிவில் திருத்தம்.

5. ஷை ஆக்ட் 11-வது பிரிவில் "சொல்லியிருந்தால் அதைக் குறித்தும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம் பிரசித்தம் செயப்பட்ட தேதியில்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1894-ம்வருஷத்து 1-வது ஆக்ட் 17-வது பிரிவில் திருத்தம்,

6. ஷை ஆக்ட் 17-வது பிரிவுடன் அடியிற்கண்ட உட்பிரிவைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படக்கூடுமென்று பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்படுகிற யாதொரு நிலத்தின் விஷயத்தில், பிரதேச கவர்ன்மென்டார் - 5 A பிரிவில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டாவென்று கட்டளையிடலாம்; மேலும், அவர்கள் அந்தப்படி கட்டளையிட்டால், 4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட பிறகு எந்தக் காலத்திலாகிலும் ஷை நிலத்தின் விஷயமாய் 6-வது பிரிவின்படி நிர்ணயம் செய்யப்படலாம்."

1894-ம்வருஷத்து 1-வது ஆக்ட் 23-வது பிரிவில் திருத்தம்.

7. ஷை ஆக்ட் 23-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட முதலாவது பகுதியில், "6-வது பிரிவின்படி நிலத்தின்விஷயமாக நிர்ணயபத்திரிகை" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நிலத்தின் விஷயமாக விளம்பரம்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1894-ம்வருஷத்து 1-வது ஆக்ட் 24-வது பிரிவில் திருத்தம்.

8. ஷை ஆக்ட் 24-வது பிரிவைச் சேர்ந்த ஏழாவது பகுதியில், "6-வது பிரிவின்படி நிர்ணயபத்திரிகை" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விளம்பரம்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்,

1894-ம்வருஷத்து 1-வது ஆக்ட் 40-வது பிரிவில் திருத்தம்.

9. ஷை ஆக்ட் 40-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில், "இதில் பின்னால் சொல்லியிருக்கிறபடி விசாரணை செய்ததனாலே" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, "5 A பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கலெக்டர் ரிபோர்ட் செய்வதன் மேலாவது இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி விசாரணை செய்ததனாலாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1894-ம் வருஷத்து 1-வது ஆக்ட் 41-வது பிரிவில் திருத்தம்.

10. ஷை ஆக்ட் 41-வது பிரிவிலே,—

(a) "அந்த உத்தியோகஸ்தரானவர் விசாரணையிலே தேறுகடையாகிற சங்கதிகளைக் குறித்துப் பிரதேச கவர்ன்மென்டாருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்;" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்; மேலும்,

(b) "உபயோகமாகும் போலிருக்கிறதென்னும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "5 A பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கலெக்டர் ரிபோர்ட் ஏதாகிலும் அனுப்பியிருந்தால் அதைக் குறித்து ஆலோசனை செய்தபிறகாவது 40-வது பிரிவின்படி விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர் அனுப்பின ரிபோர்ட்டின்மேலாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

எல். க்ராஹம்,

இந்தியா கவர்ன்மென்ட் அபிஷியேடிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,

*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.